**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி - 2015**

---

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 65(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எல்கேஏஎஸ்)

முக்கிய முகாமைத்துவ நபர்கள் மற்றும் அவர்களுடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நிறுவனங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 52,659,625 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் எல்கேஏஎஸ் 24 இன் மூலம் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை வெளிப்படுத்தும் விதத்தில் பொதுப் பேரேட்டுக் கணக்குகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 இல் 9 சதவீத வட்டி வீதத்தில் பெறப்பட்ட ரூபா 250,000,000 திறைசேரி கடன் மீதான ரூபா 336,821,918 கூட்டுத்தொகையான வட்டியும் அக் கடன் மீதான தவணைப்பணமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொதுத் திறைசேரிக்கு அத்தகைய கடனின் மூலதனப் பங்குப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் ரூபா 134,321,918 கூட்டுத்தொகையான இந்தக் கடன் மீதான வட்டி 2006 ஆம் ஆண்டின் இறுதிவரை கணக்குகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும் மிகுதி காலத்திற்கான கணக்குகளில் ரூபா 202,500,000 கூட்டுத்தொகையான வட்டிக்காக எவ்வித நிதியேற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 யூலை 01 தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது வாடிக்கையாளர்களால் கம்பஹா கிளையில் வைப்புச்செய்யப்பட்ட ரூபா 2,033,026 கூட்டுத்தொகையான வாடிக்கையாளர் வைப்புக்கள் வாடிக்கையாளர் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததுடன் இந்தத் தொகையானது இனங்காணப்படாத தொகையாக கருதப்பட்டு தலைமை அலுவலகத்தால் பராமரிக்கப்பட்ட இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறல் கணக்கில் பதிவு செய்தலில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக ரூபா 17,716,837 வழமைக்கு மாறான வரவு மீதி

காணப்பட்டது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் கணக்கிலுள்ள ரூபா 3,060,627 மீதியானது தீர்க்கப்படாது நீண்டகாலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஊ) வங்கியானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிளைகள் மற்றும் தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்குகளுக்கிடையே மீதிகளை இணக்கம் செய்திருந்தபோதிலும் , உரிய கணக்குகளை சீராக்குவதற்கு ரூபா 24,646,881 இற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்புக்கள், சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கெதிரான கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் தோற்றுவிக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் அதிகரித்திருந்த ரூபா 50,395,286 ஆன வேறுபாடொன்று இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீள்நிதியிடல் கடன்கள், ஈட்டுக் கடன்கள், தனிப்பட்ட கடன்கள், தோட்டத்துறை சேமலாப நிதியக் கடன்கள், ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் மற்றும் ஒதுக்கீடற்ற கணக்குகள் என்பவற்றின் மீதிகளுக்கும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமைகள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட மீதிகளுக்கும் இடையே ரூபா 13,318,499 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.4. இனங்காணப்படாத மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 7,552,584 வரவு மீதி மற்றும் ரூபா 2,119,457 செலவு மீதி என்பன நீண்டகாலமாக கணக்குகளில் இனங்காணப்பட்டு சீராக்கஞ்செய்யப்படாமல் முற்பணக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வங்கியானது ரூபா 2,900,000 ஆன வாடகை முற்பணக் கணக்கு மீதியை உறுதிப்படுத்தியிருந்த போதிலும் இவ் மீதியானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,592,830 செலவு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 2,391,827 தொகையான தலைமை அலுவலக காசோலைகளினை காசாக்குதல் தொடர்பிலான ஏனைய பொறுப்புக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக இனங்காணப்பட்டு இணக்கம் செய்யப்படாமல் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 856,431 இனங்காணப்படாத வரவுத் தொகை நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டிய விளம்பரமாக காட்டப்டிருந்தது.

(உ) ஏனைய வங்கிகளில் பராமரிக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 4,153,957 கூட்டுமொத்தமான இனங்காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகள் அவற்றினை இனங்கண்டுகொள்ளாமல் இணக்கம்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் அதிகாரச்சட்டம் | குருநாகல் கிளை தொடர்பிலான பதினொரு ''உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளல்'' படிவங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 754 | வங்கியானது மீளாய்வாண்டின் போது ரூபா 12,195,544 பெறுமதியிடப்பட்ட நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்திருந்த போதிலும், இருப்புக்களின் அசைவானது முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஆணடின் இறுதியிலுள்ளாறு இருப்புக்களின் செம்மையாக்கப்பட்ட பதிவேடுகளை பெறமுடிந்திருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | வங்கியானது கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றுக்காக பதிவேடொன்றை பேணியிருக்கவில்லை. |
| (இ) உள்ளகச் சுற்றறிக்கைகள் | |
| (i) பிரதம முகாமையாளரால் (கிளைச் செயற்பாடுகள்) வழங்கப்பட்ட 2014 மார்ச் 25 ஆம் திகதிய கடிதம் | கிளைகள் செயலற்ற கணக்குகள் தொடர்பில் எந்தவித பதிவேடுகளையும் பேணியிருக்கவில்லை. |
| (ii) பிரதம முகாமையாளரால் (கிளைச் செயற்பாடுகள்) வழங்கப்பட்ட பீஆர்ஓபி/14/07/11 ஆம் இலக்க அலுவலகச் சுற்றறிக்கை | சில கிளைகளால் பரிசு இருப்புப் பதிவேடு, நிலையான வைப்புச் சான்றிதழ்கள் இருப்புப் பதிவேடு, கணக்குப் புத்தகங்கள் வழங்கல் பதிவேடு, நிலையான வைப்புக்கள் மீளளித்தல் பதிவேடு என்பன முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 413 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 681 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 268 மில்லியன் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வட்டி செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் முறையே 7.09 சதவீதத்தாலும் 24.4 சதவீதத்தாலும் குறைவடைந்தமை மற்றும் வட்டி வருமானம் 6.77 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

மேலும், 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் வங்கியின் மொத்தப் றெுமதி சேர்க்கை 28.68 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது இது 31 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.2.1 வங்கியின் இலாபத்தன்மை

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகள் காலப்பகுதி என்பவற்றிற்கான வங்கியின் இலாபத்தன்மை கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2015<br>ரூபா மில்லியன் | 2014<br>ரூபா மில்லியன் | 2013<br>ரூபா மில்லியன் | 2012<br>ரூபா மில்லியன் | 2011<br>ரூபா மில்லியன் | 2010<br>ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | வட்டி வருமானம் | 3,879 | 3,633 | 3,635 | 2,879 | 2,611 | 2,362 |
| (ii) | வட்டிச் செலவினம் | (2,057) | (2,214) | (2,459) | (1,725) | (1,214) | (1,368) |
| (iii) | தேறிய வட்டி வருமானம் | 1,822 | 1,419 | 1,176 | 1,153 | 1,397 | 994 |
| (iv) | ஏனைய செயற்பாட்டு வருமானம் | 107 | 103 | 97 | 73 | 76 | 387 |
| (v) | ஏனைய வருமானம் {இலாபம்/ (நட்டம்)} | (95) | (23) | (48) | 7 | -- | 1 |
| (vi) | தேறிய செயற்பாட்டு வருமானம் | 1,834 | 1,499 | 1,225 | 1,233 | 1,473 | 1,382 |
| (vii) | மொத்த மீண்டெழும் செலவினம் | (1,154) | (1,086) | (882) | (803) | (785) | (743) |
| (viii) | வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 680 | 413 | 343 | 430 | 688 | 639 |
| (ix) | வரி | (271) | (140) | (110) | (158) | (178) | (179) |
| (x) | வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் | 409 | 273 | 233 | 272 | 510 | 460 |
| (xi) | விற்பனைக்காக கிடைத்த நிதிச் சொத்துக்கள் மீதான நட்டங்கள் | 13 | 3 | 1 | (2) | (3) | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (xii) | வரையறுக்கப்பட்ட நலன்புரி திட்டங்கள் (+/-) மீதான உண்மையான இலாபங்கள்/(நட்டங்கள்) | - | (102) | - | - | - | - |
| | **மொத்த திரட்டிய வருமானம்** | **422** | **174** | **234** | **270** | **507** | **-** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ 2010 – 2015 காலப்பகுதியின் போது ரூபா 2,362 மில்லியனிலிருந்து ரூபா 3,879 மில்லியன் வரை அல்லது 64.2 சதவீதத்தால் வட்டி வருமானம் படிப்படியாக அதிகரித்திருந்த அதேநேரம் 2010 முதல் 2011 வரை வட்டிச் செலவினங்கள் ரூபா 1,368 மில்லியனிலிருந்து ரூபா 1,214 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது இது ரூபா 2,057 மில்லியன் அல்லது 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

- ❖ 2010 – 2011 காலப்பகுதியின் போது ரூபா 639 மில்லியனிலிருந்து ரூபா 688 மில்லியன் வரை அல்லது 7.6 சதவீதத்தால் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அதிகரித்திருந்தது. அதன் பின்னர், 2012 – 2013 காலப்பகுதியின் போது இது ரூபா 430 மில்லியனிலிருந்து ரூபா 343 மில்லியன் வரை அல்லது 20.2 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது இது ரூபா 413 மில்லியனிலிருந்து ரூபா 680 மில்லியன் வரை அல்லது 64.64 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

- ❖ மீளாய்வாண்டில் உள்ளபடியான வரிக்கு முன்னரான தேறிய இலாபமானது 46.28 சதவீதத்தால் பாதீடப்பட்ட இலாபத்தை விஞ்சியிருந்தது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் , மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்கான வங்கியின் முக்கியமான சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| | | % | % | % | % | % |
| | இலாபத்தன்மை விகிதங்கள் | | | | | |
| i. | தேறிய வட்டி எல்லை | 5.65 | 4.97 | 4.76 | 5.39 | 7.26 |
| ii | உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 9.90 | 6.87 | 6.00 | 7.31 | 14.67 |
| iii | சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் | 2.11 | 1.44 | 1.39 | 2.01 | 3.58 |

போதிய மூலதன விகிதங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| i | உரிமை மூலதனம் / மொத்தச் சொத்துக்கள் | 12.45 | 13.26 | 14.65 | 17.04 | 17.76 |
| ii | உரிமை மூலதனம் / கடன்கள் | 15.61 | 16.56 | 18.38 | 20.66 | 22.34 |
| | iii தட்டு I | 22.17 | 25.32 | 28.09 | 33.22 | 39.94 |
| | iv தட்டு II | 22.65 | 25.32 | 28.09 | 33.22 | 39.94 |

திரவ விகிதங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| i. | திரவச் சொத்துக்கள் / வைப்புக்கள் (பொறுப்புக்கள்) | 20.62 | 22.79 | 21.24 | 21.98 | 20.04 |
| ii | வைப்புக்கள்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 104.95 | 99.52 | 99.18 | 93.40 | 92.51 |
| iii | கடன்பெறல்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 3.62 | 4.61 | 4.21 | 3.98 | 4.1 |

உரிமம்பெற்ற விசேட வங்கிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பங்கு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| i. | தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 5.88 | 5.56 | 6.22 | 5.93 | 6.08 |
| ii | மொத்தச் சொத்துக்கள் | 3.11 | 2.79 | 2.92 | 3.04 | 3.04 |

வங்கியானது மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு 5 சதவீதம் மற்றும் 10 சதவீதமான தட்டு I மற்றும் தட்டு II இன் போதிய மூலதன விகிதத்தின் ஆகக் குறைந்த எல்லையை பேணுவதில் நல்ல முன்னேற்றத்தை கொண்டிருந்த போதிலும் இரண்டு விகிதங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளாறு குறைவடைந்திருந்ததுடன் கடந்த நான்கு ஆண்டுகளாக குறைந்த விகிதங்களை பதிவுசெய்திருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**(அ) செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவுள்ள கடன்கள் ரூபா 24,953.1 மில்லியனாகவுள்ளதுடன் அதில் ரூபா 7,433.02 மில்லியன் தொகை செயற்பாடற்ற கடன்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் இது மொத்த நிலுவையாகவுள்ள கடன்களில் 29.78 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ii) மீளாய்வாண்டில் ஈட்டு, தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தனிப்பட்ட கடன்கள் போன்ற செயற்பாடற்ற கடன்களின் சதவீதங்கள் முறையே 8.21 சதவீதம், 68.20 சதவீதம், மற்றும் 5.84 சதவீதமாகவிருந்ததுடன் முன்னைய ஆண்டில் இத்தகைய செயற்பாடற்ற கடன்களின் சதவீதங்கள் 11.25 சதவீதம், 72.36 சதவீதம் மற்றும் 15.64 சதவீதமாகவிருந்ததால் இக் கடன்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடையும் போக்கைச் சுட்டிக்காட்டுகிறது. எனினும், செயற்பாடற்ற மோட்டார் வாகனக் கடன் முன்னைய ஆண்டிலிருந்த 8.97 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 17.95 சதவீத குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடையும் போக்கைக் காட்டுகின்றது.

**(ஆ) நீண்டகால நிலுவையாகவுள்ள கடன் மீதிகள்**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளாறான மொத்தக் கடன்கள் நிலுவையானது ரூபா 24,817.90 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 4,156.40 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவிருந்தது. ரூபா 9,706 மில்லியன் மற்றும் ரூபா 1,475 மில்லியன் தொகையான முறையே ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் மற்றும் தோட்டத்துறை ஊழியர் சேமலாப நிதியக் கடன்கள் என்பனவற்றில் முறையே ரூபா 3,443 மில்லியன் அல்லது 35 சதவீதம் மற்றும் ரூபா 436 மில்லியன் அல்லது 30 சதவீதம் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவைகளாக இருந்தன.

**(இ) கடன் வழங்கல்**

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கடன்களின் மொத்த எண்ணிக்கை, கடன்களின் மொத்தப்பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 245 மில்லியன் மற்றும் ரூபா 1,609 மில்லியன் அல்லது 1.6 சதவீதம் மற்றும் 27 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது எந்தவித மோட்டார் வாகன கடன்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திட்டமிடப்பட்ட இலக்குகளின் அடைதல்**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் இலக்குகள் மீளாய்வாண்டின் போது முழுமையாகவோ பகுதியாகவோ அடையப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| செயல் குறியீடு | இலக்கு | எய்தல்களின் நிலைமை |
|---|---|---|
| இலக்கு 1 | ஒரு மாதத்திற்கு ரூபா 400 மில்லியனால் சில்லறை வைப்புக்களின் தேறிய அதிகரிப்பு | ஒரு மாதத்திற்கு வைப்பின் தேறிய அதிகரிப்பு ரூபா 47 மில்லியன் அல்லது இலக்கின் 11.75 சதவீதம் மாத்திரமாகும். |
| | ஒரு மாதத்திற்கு ரூபா 950 மில்லியனால் வைப்புக்களின் தேறிய அதிகரிப்பு. | ஒரு மாதத்திற்கு வைப்பின் தேறிய அதிகரிப்பு ரூபா 307 மில்லியன் அல்லது இலக்கின் 32 சதவீதம் மாத்திரமாகும். |
| இலக்கு 4 | தேறிய வட்டி எல்லையின் பராமரிப்பை உறுதிப்படுத்துவதற்கு கிளை முகாமையாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய இலாப இலக்குகள் | கிளைகளுக்கு இலாப இலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | வருமான விகிதத்திற்கான கிரயத்தை 58 சதவீதத்திலிருந்து 50 சதவீத்திற்கு முன்னேற்றுதல். | வருமான விகிதத்திற்கான கிரயமானது 54 சதவீதமாகும். |
| | மொத்த வைப்பு அடித்தள தேறிய அதிகரிப்பை ரூபா 18 பில்லியனிலிருந்து ரூபா 23 பில்லியனாக அடைதல் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வைப்பு அடிப்படை ரூபா 18.96 பில்லியன் ஆகும். |
| இலக்கு 5 | தனிப்பட்ட மற்றும் வாகனக் கடன்களின் செயற்பாடற்ற கடன் விகிதத்தை 5 சதவீதத்திற்கு குறைத்தல். | தனிப்பட்ட மற்றும் வாகனக் கடன்களின் செயற்பாடற்ற கடன் விகிதங்கள் முறையே 5.82 சதவீதம் மற்றும் 10.31 சதவீதமாக இருந்தன. |
| இலக்கு 6 | வீடமைப்புக் கடன்கள் (ஈட்டு மற்றும் ஊ,சே.நி) ரூபா 7.2 பில்லியனால் அதிகரித்தல். | மீளாய்ாண்டின் போது ஊ,சே.நி மற்றும் ஈட்டுக்கடன்கள் பணவளிப்பானது ரூபா 4.27 பில்லியனாகவிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் இது 4.5 பில்லியனாகவிருந்தது |
| | எஸ்எம்ஈ கடன் வழங்கலை 2013 இல் ஆரம்பித்தலுடன் வளர்ச்சியை அடைதல் | எஸ்எம்ஈ கடன் வழங்கல் மீளாய்வாண்டிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| இலக்கு 7 | புதிய குழு வங்கியியல் தீர்வொன்றுடன் சகல கிளை வலையமைப்பை ஒன்றிணைத்தல் | 2015 இல் எந்தவொரு புதிய குழு வங்கியியல் தீர்வும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | சகல கிளைகளிற்காகவும் ஏரீஎம் வலையமைப்பை அமுலாக்கல் | 2015 ஆம் ஆண்டில் ஏரீஎம் பிரிவுகள் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | வணிக செய்முறை மீள் பொறியியலினூடாக செயற்பாடுகள் மற்றும் நடைமுறையிலிருக்கின்ற உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல். | அத்தகைய செயற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| இலக்கு 08 | நடைமுறையிலிருக்கின்ற முறைமையில் எம்ஐஎஸ் ஐ அபிவிருத்தி செய்தல். | அத்தகைய புதிய அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | எம்ஐஎஸ் தேவைப்பாடுகளை உடனடியாக வழங்குதற்கு ஐரீ குழுவை பலப்படுத்தல் | புதிய உத்வேகம் எதுவும் ஐரீ குழுவிற்கு வந்திருக்காததுடன் பதியணியினரை பலப்படுத்துவதற்கு எந்தவித பயிற்சியும் ஐரீ குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை |

**4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்**

**4.2.1 கடன்கள் நிர்வாகம்**

**(அ) ஈட்டுக் கடன்கள்**

ஈட்டுக் கடன்களை வழங்குவது தொடர்பில் பிரதான நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வேலைவாய்ப்பின் தற்காலிகத்தன்மையை கருத்திற்கொள்ளாமல் 2012 ஏப்ரல் 17 இல் ரூபா 1,950,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய எந்தவித தவணைக்கட்டணமும் 2015 திசெம்பர் 31 வரையிலும் கடன்பெறுநரால் மீளசெலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய கடன்களின் நிலுவை நிலமைகளை கருத்திற்கொள்ளாமல் வழங்கப்பட்ட கடன்களின் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) 1990 இன் 18 ஆம் இலக்க கடன் தகவல்கள் பணியக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், பி.ஓ 1594 ஆம் கடன் இலக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் விபரங்கள் கடன் தகவல்கள் பணியகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால், வேறொரு வர்த்தக வங்கியானது, இந்தக் கடனின் பெறுமதியை கருத்திற்கொள்ளாமல் கடனொன்றை வழங்கியிருந்தது.

(iv) ஓன்பது சந்தர்ப்பங்களில் வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு வட்டிவீத மீளாய்வு மற்றும் கடன் காலத்தின் விரிவாக்கம் பற்றி அறிவித்திருக்கவில்லை.

(v) ரூபா 3,975,000 மொத்தப் பெறுமதியான மூன்று கடன்கள் கடன் தகவல்கள் பணியகத்திடமிருந்து அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படாமல் வழங்கப்பட்டிருந்தது.

(vi) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு கடன்களின் நிலுவையாகவுள்ள பெறுமதி ரூபா 5,029,332 ஆகும். எனினும், இது அத்திகதியிலுள்ளவாறான ரூபா 3,650,000 பெறுமதியான எதிர்பார்த்த விற்பனைப் பெறுமதியை விஞ்சியிருந்தது.

(vii) வாடிக்கையாளர்களின் வருமான மதிப்பீடுகளை முறையாக மேற்கொள்ளாமல் ரூபா 14,615,000 பெறுமதியான ஐந்து கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்

இறுதியிலுள்ளவாறு அவற்றின் மீதான நிலுவையாகவுள்ள தொகை ரூபா 11,775,483 ஆக இருந்தது.

(viii) ஈட்டுக் கடன்களிற்காக உடமையாக்கப்பட்ட ஆதனங்களின் பெறுமதி சில சந்தர்ப்பங்களில் உரிய கடன்களின் நிலுவை மீதிகளை மேவுவதற்கு போதியதாக இருக்கவில்லை. அத்தகைய சில சந்தர்ப்பங்களில் கடன்களிற்கு எதிராக உடமையாக்கப்பட்ட ஆதனங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 21,705,000 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிலுவையாகவுள்ள மொத்தக் கடன்கள் ரூபா 35,003,631 ஆக இருந்ததால் உருவாக்கப்பட்ட நட்டம் ரூபா 13,298,631 ஆக இருந்தது.

**4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

2016 ஏப்ரல் 29 இன் பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக வங்கியால் அதன் ஊழியர்கள் சார்பாக ரூபா 17,120,888 கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனமொன்றின் அபிவிருத்திக்காக பதவியணி பயிற்சி மிகவும் முக்கிய அம்சமாக இருக்கின்ற போதிலும் 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தால் வேண்டப்பட்டவாறு பயிற்சி குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 13.8 மில்லியன் மொத்தப் பாதீட்டு மதிப்பீட்டில் 30 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயிற்சி மற்றும் அபிவிருத்தி நோக்கங்களிற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும் வங்கியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 53 சதவீதத்திலும் குறைவான ஒரு தொகையை செலவிட்டிருந்தது.

(ஆ) வங்கியின் மனித வளக் கொள்கை வழிகாட்டலின் 6.4 ஆம் அத்தியாயத்துக்கு முரணாக, பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் சட்டம்), உதவிப் பொது முகாமையாளர் (நிதி) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்) ஆகிய முக்கிய பதவிகள் உள்ளடங்கலாக 10 அலுவலர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக பதிற்கடமை அடிப்படையில் வேலைசெய்து கொண்டிருக்கின்றனர்.

(இ) சந்தைப்படுத்தல் பிரிவிலிலுள்ள முக்கிய பதவியான சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவி 2010 இலிருந்து ஒப்பந்த அடிப்படையில் காணப்பட்டிருந்தது.

**4.5 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 38,312,700 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அலுவலகம் மற்றும் தலைமை அலுவலக கட்டிடத்தின் வாகனம் நிறுத்துமிடம், கழிவறை, சாப்பாட்டு அறை, களஞ்சியங்கள் , கம்பி முறைமைகள் போன்ற அதிகமான வசதிகள் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகவிருப்பதால் திருப்திகரமான நிலையில் இருக்கவில்லை. எனினும், வாடகை உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், காப்புறுதி பாதுகாப்பொன்றை பெறுவதற்கு வங்கியானது தவறியிருந்தது. ஆகையால்,

பதவியணி, சொத்துக்கள், மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பானது இடர் நிலையிலுள்ளது.

(ஆ) விளம்பரங்களுக்காக ரூபா 3.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில் அதிகமான விளம்பரங்கள் பிரசித்தி பெற்றிராத ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆகையால், இந்த செலவினத்திலிருந்து வங்கியானது அதிகபட்ச நலன்களை பெற்றிருந்ததா என்பது சந்தேகமானதாகவிருந்தது. மீளாய்வாண்டின் போது சந்தைப்படுத்தல் செலவினங்களுக்காக விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) வங்கியிலிருந்து ரூபா 2,400,000 பணத்தை மோசடியாக எடுத்த நபருக்கு எதிராக தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கின் நடைமுறை நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

வங்கியானது 2015 செப்தெம்பரில் அதனுடைய பாதீட்டை மீளாய்வு செய்திருந்த போதிலும், திருத்தப்பட்ட பாதிட்டிற்கும் உண்மையான பெறுமதிகளுக்கும் இடையே 15 சதவீதத்திலிருந்து 84 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்ட்டதால் பாதீடானது ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

வங்கியின் உள்ளகக் கணக்காய்வு அதிகாரப்பத்திரத்தின் 1 மற்றும் 3 ஆம் பந்திகளுக்கு முரணாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணி வழமையாக வேறு பிரிவுகளுக்கும் மற்றும் வேறு பிரிவுகளிலிருந்தும் மாற்றப்பட்டிருந்தது. மேலும், உதவிப் பொது முகாமையாளரின் (நிதி) கடமைகள் 2014 ஆகஸ்ட் 14 ஆம் திகதியிலிருந்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பிரதம உள்ளக கணக்காய்வாளரால் மேவுகை செய்யப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | பகுதிகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | கணக்கீடு | பதிவு செய்வதில் ஏற்படுகின்ற தவறுகள் காரணமாக சில கணக்கு மீதிகள் சரியாக இருக்கவில்லை. |
| (ii) | வங்கி கணக்குகளின் செயற்பாடு | (i) பதினொரு வங்கி இணக்கக்கூற்றுக்கள் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை<br>(ii) ரூபா 2,354,487 மற்றும் ரூபா 1,908,602 தொகையான முறையே இனங்காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகள் தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக வங்கி இணக்கக்கூற்றுக்களில் இருந்தன. |